முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 297/2021

இன்று 2025 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 09 ம் நாள் இன்று இந்த வா.சா.1 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : விக்னேஷ் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : மயில்நாதன் | கிராமம் | : குட்டை கருப்பராயன் கோவில் |
| வயது | : 20 | தாலூக்கா | : அவினாசி |
| நாள் | : 09-10-2025 | மாவட்டம் | : திருப்பூர் |

**சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் மலையபாளையம் ரோட்டில் குடியிருந்து வருகிறேன். நான் அங்கு வசித்து வருவதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கை நான் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய பிறந்த தேதியை மாற்ற வேண்டி தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய பிறந்த தேதி என்றால் 14.09.2003 ம் தேதி பாண்டிச்சேரியில் பிறந்தேன். மேல்நிலை படிப்பு எங்கு படித்தேன் என்றால் அரசு மேல்நிலை பள்ளி மலையப்பாளையத்தில் படித்தேன். மலையப்பாளையம் எங்குள்ளது என்றால் நம்பியூருக்கு அருகில் உள்ளது. அது எந்த மாவட்டத்தைச் சேர்ந்தது என்றால் ஈரோட்டை சேர்ந்தது. இந்த வழக்கை தாக்கல் செய்ய இந்நீதிமன்றத்திற்கு அதிகாரமில்லை என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

VANITHA Digitally signed by VANITHA
Date: 2025.10.09 16:41:01 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.